# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 6 |
| Name | : | தமிழ்செல்வன் |
| Father Name | : | ஜோதி |
| Village | : | ராணிப்பேட்டை |
| Taluk | : | ராணிப்பேட்டை |
| Age | : | 28 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.09.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது ராணிப்பேட்டையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டு இறுதியில் ரிலீவிங் மருத்துவராக பணிசெய்தேன். அதற்கு பின்னிட்டு செங்கல்பட்டு, சாலவாக்கம் கிராமத்தில் உள்ள தனியார் கிளினிக்கில் மருத்துவராக பணிபுரிந்தேன். அச்சமயம் டெலகிராம் என்ற செயலி மூலம் சுகம் கிளினிக்கில் அலுவல் மருத்துவருக்கான பணியிடம் காலியாக இருப்பதை தெரிந்துகொண்டு மேற்படி மருத்துவமனையின் முதலாளி ஆஜர் எதிரி பிளஸ்சியிடம் போன் மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது மேற்படி பணியிடத்திற்கான பணிநேரம் மற்றும் ஊதியம் எனக்கு ஏற்புடையதாக இருந்தது. மேலும் ஆஜர் எதிரியிடம் பேசியபோது இதற்கு முன்பு மேற்படி மருத்துவமனையில் அலுவல் மருத்துவராக பணிபுரிந்த மருத்துவர் காயத்ரி என்பவருக்கு திருமணம் ஏற்பாடு செய்திருந்ததால் பணியை தொடரவில்லை என்றும், அந்த பணியிடத்திற்கு என்னை அலுவல் மருத்துவராக நியமிப்பதாக கூறினார். அதன்பேரில் கடந்த 22.02.2023 ஆம் தேதி காலை 9.30 மணியளவில் கொடுவாயில் உள்ள சுகம் கிளினிக்கில் அலுவல் மருத்துவராக பணியில் சேர்ந்தேன். பணிக்கு சேர்வதற்கு முன்பே மேற்படி மருத்துவமனை கிளினிக்கல் எஸ்டாபிஸ்மெண்ட் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் உள்ளதா எனக் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உள்ளதாக கூறினார். பின்னிட்டு 22.02.2023 ஆம் தேதி காலை 9.30

மணி முதல் மதியம் 1.30 வரை பணியில் இருந்தேன். அப்போது சுமார் 15 நோயளிகளுக்கு மருத்துவம் பார்த்தேன். மருத்துவமனை பதிவு சம்பந்தமான ஆவணங்களை சரிபார்ப்பதற்காக ஆஜர் எதிரியிடம் அன்றைய தினம் கேட்டபோது சான்றிதழ்கள் புதுப்பிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கூறினார். அதனால் மேற்படி ஆவணங்களை நான் அன்றைய தினம் பார்க்கவில்லை. பின்னர் பணி முடிந்து நான் சென்றுவிட்டேன். அன்று மாலை எந்த அலுவலும் மேற்படி மருத்துவமனையில் நான் பார்க்கவில்லை. பின்னர் 23.02.2023 ஆம் தேதி காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை பணியில் இருந்தபோது காலை சுமார் 11.30 மணியளவில் திருப்பூர் மாவட்ட மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் கனகராணி மற்றும் அவர்களுடன் மூன்று அலுவலர்கள் வந்தார்கள். இணை இயக்குநர் அவர்கள் மேற்படி மருத்துவமனையில் நோயாளிபோல் வந்து திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் எனது சான்றிதழ்களை சரிபார்த்து நான் பதிவு பெற்ற மருத்துவர் என உறுதிசெய்துகொண்டார். பின்னர் தொடர்ந்து என்னை விசாரித்தார். அந்த விசாரணையில் என்னிடம் ஆஜர் எதிரி நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து மருந்து மாத்திரைகள் பரிந்துரை செய்தாரா என்று என்னிடம் கேட்டார். அப்போது நான் பணியில் இருந்த வேலையில் ஆஜர் எதிரி நான் சிகிச்சை அளித்து பரிந்துரை செய்த மருந்துகளை நோயாளிகளுக்கு கொடுத்தார். நான் பணியில் இருந்த நேரத்தில் ஆஜர் எதிரி தன்னிச்சையாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து மருந்துகள் கொடுக்கவில்லை. பின்னர் விசாரணை முடிந்தவுடம் என்னை வீட்டிற்கு செல்லுமாறு கூறினார்கள். நான் சென்றுவிட்டேன். வழக்கு சம்பந்தமாக ஆஜர் எதிரி போலி மருத்துவராக செயல்பட்டதற்காக அவர் மீது புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பணியில் சேர்ந்து 2 வது நாளே சோதனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு முன்பாக காயத்ரி என்ற மருத்துவர் அந்த மருத்துவமனையில் பணியில் இருந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் பணியில் இருந்த மருத்துவமனையின் பெயர் சுகம் கிளினிக் ஆகும். அந்த கிளினிக்கில் மருந்துக்கடைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் 23.02.2023 ஆம் தேதியன்று அன்றைய தினமே போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து

எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 13.03.2023 ஆம் தேதியன்று என்னிடம் ஊதியூர் காவல் நிலையத்தைச்சேர்ந்த வையாதுரை என்ற காவலர் என்னை விசாரித்து எழுதி வாங்கினார் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனை 100 சதுரஅடி கொண்ட 10 க்கு 10 இடம் என்றால் சரிதான். எனக்கு ஒரு அறை வெளியில் நோயாளிகள் அமர ஒரு அறை உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் சிகிச்சைக்கு வந்த 15 நபர்களுக்கும் நான்தான் வைத்தியம் பார்த்தேன் என்றால் சரிதான். ஆய்வுக்கு மருத்துவ இணை இயக்குநர் வரும்போது மருத்துவமனையில் ஒரே ஒரு நோயாளி மட்டுமே இருந்தார். நான் இருக்கும் வரை காவல் துறையினர் அன்றைய தினம் வரவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த மருத்துவமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் பேரில் எந்த லெட்டர் பேடோ, மருத்துவர் என்ற பெயர் பலகையோ மருத்துவமனையில் இல்லை என்றால் சரிதான். ஆய்வுக்கு வரும்போது நான் மருத்துவமனையில் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். என்னை வெளியேற்றிவிட்டு மருத்துவ இணை இயக்குநர் கிளினிக்கை சீல் வைத்துவிட்டார் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தபோது மருத்துவ இணை இயக்குநர் ஆய்வு என்ற பெயரில் என்னை வெளியேற்றி 5 நாட்கள் கழித்து எதிரி மீது வழக்கு பதிவு செய்து என்னை சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை**

நான் பணியில் இருந்தபோது ஆஜர் எதிரி நான் சிகிச்சை அளித்து பரிந்துரை செய்த மருந்துகளை நோயாளிகளுக்கு எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார் என்றால் சிறிய அளவில் ஆஜர் எதிரி மருந்துகள், மாத்திரைகள், சிரப்புகளை சிறிய ரேக்கில் வைத்திருந்தார். அதிலிருந்து எடுத்துக்கொடுத்தார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

மருந்துகள் அனைத்தும் நான் வைத்தியம் பார்த்த அறையில்தான் இருந்தது. நான் சொன்னதின் பேரில்தான் ஆஜர் எதிரி எடுத்துக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் மருத்துவம் பார்ப்பதற்கும் நோயாளிகளுக்கு மருந்துகளை பரிந்துரை செய்து கொடுப்பதற்கும், எனக்கு மருத்துவ கவுன்சிலில் உள்ள விதிமுறைகளின்படி அதிகாரம்

உள்ளது. தனிப்பட்ட முறையில் எதிரி யாருக்கும் எவ்வித மருந்துகளோ, வைத்தியமோ பார்க்கவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.09.12 19:34:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்